Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 169

National Tamil Daily தேசிய தினசரி

(31-7-65)

விசுவாவசு ஆடி 16 ஏபி ஆகிர் பிறை 2 சனிக்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே

தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

### காஷியர் மீது எறிகுண்டு வீச்சு!

கொழும்பு, வெள்ளி

மட்டக்குளியாவில் உள்ள மூலாஜி ஆலையில் தொழிலாளர் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தம்செய்துவருகின்றனர். மூலாஜி ஆலைக் காஷியர் இன்று கம்பெனிக் காரொன்றில் பிரயாணம் செய்கையில் அவர்மீது எறிகுண்டு ஒன்று வீசப்பட்டது. பின்னர் அவர் சிலரால் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள காஷியர் எம். சபாபதியின் நிலை ஆபத்தாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

# 5 கோடி டாலர் உதவி

## இவ்வாண்டு கிடைக்கும் 'உதவி நாடுகள்' முடிவு

வாஷிங்டன், ஜூலை 30

**இவ்வருடத்தின் எஞ்சிய காலத்தில் இலங்கையின் நிதிக்கஷ்டத்தைச் சமாளிக்க 5 கோடி டாலர் (சுமார் 25 கோடி ரூபா) உதவுவதென, உதவி நாடுகள் குழு தீர்மானித்திருப்பதாய் வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.**

இலங்கைக்கு இவ்வளவு உதவி, இவ்வாண்டு தேவைப்படுமென உலக வங்கி கணித்திருப்பது நியாயமானது என இந்த நாடுகள் கருத்துத்தெரிவித்திருக்கின்றன. இலங்கையின் செலாவணி பற்றாக்குறைக்கு உதவிசெய்யவும் இந்நாடுகள் விருப்பம் தெரிவித்திருக்கின்றன. விரைவில் இந்த விஷயம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத் தெரிகிறது. தனிப்பட்ட நாடுகள் எவ்வளவு உதவி வழங்குவது என்பது அப்போது தீர்மானிக்கப்படும்.

ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான் பிரிட்டன் அமெரிக்கா ஆகிய நாடுகள் இக்குழுவில் இருக்கின்றன.

இலங்கைக்கு உதவிபுரிவது பற்றி குழு நடத்திய கூட்டத்தில் மேற்கு ஜெர்மனி இந்தியா ஆகிய நாடுகளும் சர்வதேச நிபுணர்களும் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டன.

இலங்கையின் சார்பாக திட்ட, பொருளாதாரக் கமிஷனைச் சேர்ந்த திரு காமினி கொரியாவும், திரு டி நானாம் குழுவின் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கு மேற்கொண்டு உதவியளிக்கும் விஷயம் பற்றி ஆராய குழு மீண்டும் கூடுமென விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஜி. ஜி. ஐ. நா. செல்வார்

கொழும்பு, வெள்ளி



யாழ்ப்பாணம் எம் பி யும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு ஜி ஜி பொன்னம்பலம் இவ்வருடம் செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் ஐ நா மகாசபையின் 20-வது தொடர் கூட்டத்திற்கு இலங்கை தூதுகோஷ்டிக்குத் தலைமைதாங்கிச் செல்வார் இத்தூதுகோஷ்டியில் முன்னாள் லதவிகர் திரு ஆர் எஸ் எஸ் குணவர்த்தன, சண்டி எம் பி திரு ஈ எஸ் சேனநாயக்காவும் செல்வார்கள்

## லஞ்சக் குற்றச்சாட்டு விசாரணை

கொழும்பு, வெள்ளி

116 லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள்மீதான வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு எல்லாம் தயாராகியுள்ளதாக அறியப்படுகிறது.

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் திருத்தமசோதா செனட்டில் நிறைவேறியுள்ளது. கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் பெற்றதும் இது சட்டமாகும். இதற்கான கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் சில தினங்களில் கிடைக்குமென நம்பப்படுகிறது.

## தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு:
11 P 0834 ரூபா 29,650-00

இரண்டாவது பரிசு:
10 S 0709 ரூபா 11,860-00

மூன்றாவது பரிசு:
18 A 0475 ரூபா 3,965-00

(3-ம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டு விலைக்கு அப்பியாசக் கொப்பிகள்

### கையிருப்பு விபரம் தெரிவிக்காத வர்த்தகர்மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

பாடசாலை மாணவர்கள் தமக்குத் தேவையான அப்பியாச கொப்பிகளை நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்வதற்காக இந்தக் கொப்பிகள் கட்டுப்பாட்டு விலைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 40 பக்கங்களைக் கொண்ட கொப்பி ஒன்று 15 சதமெனவும் 80 பக்கங்களை கொண்ட கொப்பி ஒன்று 30 சதமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்க வர்த்தமானியில் இதுபற்றி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த கொப்பிகளை விற்பனை செய்யும் மொத்த சில்லறை வியாபாரிகள் தாம் கையிருப்பில் எவ்வளவு கொப்பிகள் வைத்திருக்கிறார்கள் என்பது பற்றியும் தமது விலாசம் பற்றியும் பொதுத் தேவைப்பொருள்களின் கட்டுப்பாட்டதிகாரிக்கும் உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்கும் விபரமாக அறிவிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டப்பதில் கட்டுப்பாட்டு அதிகாரியாக அரசாங்க அதிபர் திரு நெவில் ஜெயவீராவும் உதவிக் கட்டுப்பாடு அதிகாரியாக உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு எஸ். பரமநாதனும் கடமை யாற்றுகிறார்கள்; மேற்படி கொப்பியை விற்பனை செய்பவர்கள் தமது கையிருப்பு ஆகியனபற்றி அறிவிக்கவேண்டிய இறுதித்திகதி நேற்றாக இருந்தும் (ஜூலை 30) இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து எவரும் இதுபற்றிய விபரம் தெரிவிக்கவில்லையென அறியப்படுகிறது இவ்விதம் தாம் வைத்திருக்கும் இந்தப் பொருள்கள் பற்றிய விபரம் தெரிவிக்காதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென உதவிக்கட்டுப்பாட்டதிகாரி திரு. பரமநாதன் அறிவித்துள்ளார்.

## காரில்வந்த கண்டக்டர் இறங்கி ஓடினர்

### திடீர் பரிசோதனைக் குழுவினர் சாட்சியம்

பருத்தித்துறை, வெள்ளி

"எனது வீட்டிற்கும் அறிவித்துவிடுங்கோ" எனக் கூறிவிட்டு இறங்கி ஓடிய கண்டக்டர் இராமசாமியை துரத்திப்பிடித்து காரில் ஏற்றியதாக திடீர் பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த திரு கதிர்காமத்தம்பி பருத்தித்துறை டிப்போவில் நடந்த விசாரணையின் போது தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

காரில் கொண்டு செல்லப்பட்ட கண்டக்டர் திடீர் பரிசோதனையாளர்கள் பிறிதோர் பஸ்ஸை பரிசோதிக்கச் சென்றபோது காரைவிட்டு இறங்கி ஓடியதாகக் கூறப்படுகிறது.

திரு இராமசாமியை பஸ்ஸில் தம் அன்றைய தினம் 11 மணியளவில் கண்டதாயும் அவர் திறந்த பேனியுடனும், கழுத்தில் சங்கிலியுடனும் காணப்பட்டாரெனவும் யாழ் கிழக்கு பஸ்டிப்போவைச் சேர்ந்த கொ

(6-ம் பக்கம் பார்க்க)

## 'ஈழநாடு' நிருவிநிதி

யாழ்ப்பாணம், சனி

ஈழநாடு குருவிநிதி நிவாரண உதவி நிதிக்கு கரவெட்டி ஐக்கிய நாணயச் சங்கம் ரூ 100 உதவியுள்ளது.

## "நான் தான் அரசாங்கம்"

### பாராளுமன்றத்தில் பிரதமர் பேச்சு

பம்பலப்பிட்டி, வெள்ளி

'நான்தான் அரசாங்கம்' என்று பிரதமர் டட்லி சேனநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் பலத்த குரலில் கூறிய பொழுது அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த எம். பி.க்கள் பலத்த கரகோஷம் செய்தார்கள்.

கல்வி மந்திரிமீது கொண்டு வரப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது பேசிய பிரதமர் மேலும் கூறியதாவது:-

பிரதமர் பதவி சம்பந்தப்பட்டமட்டில் ஏதோ சச்சரவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அதில் உண்மையில்லை. தகராறு எதுவும் கிடையாது. நிலைமை இப்படி இருக்கையில் ராஜாங்க மந்திரி திரு. ஜெயவர்த்தன பிரதமராகக்கூடவிருந்தால் நான் அவருக்குக் கீழ் கடமையாற்றுவதில் மகிழ்ச்சியடைவேன்."

கல்வி இலாகா சமீபத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளி யார் என்பதுபற்றி எதிர்க் கட்சியினர் கேட்டபோதே "நான்தான் அரசாங்கம்; நானேதான் அரசாங்கம்" என்று பிரதமர் தெரிவித்தார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாபற்றி பிரதமர் குறிப்பிட்டபோது எதிர்க்கட்சியினர் (ஜே. ஆர். பிரதமர் ஆவதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று கூச்சலிட்டார்கள்.

### பிரேரணை தோல்வி

கல்வி அமைச்சர்மீது எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சாதகமாக 51 வாக்குகளும், பாதகமாக 95 வாக்குகளும் கிடைத்ததால், நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்தது.

## 6 பேர் பலி

கராச்சி, ஜூலை 30

இங்கு 2 மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததால் 6 பேர் கொல்லப்பட்டனர்.

## பார்குமாரகுலசிங்கம் காலமானர்

கொழும்பு, வெள்ளி

பிரபல அட்வகேட் திரு ஜி பார் குமாரகுலசிங்கம் இன்று அதிகாலை கொழும்பில் காலமானார். மாரடைப்பினால் அவர் மரணமானார். ஸ்தல ஸ்தாபன சேவைக் கமிஷனிலும் திரு குமாரகுலசிங்கம் ஓர் அங்கத்தவராவர்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

அண்ணல் வாக்கு

**உரிமைகளை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு நம்முடைய கடமைகளை மறந்துவிட்டால் அந்த உரிமைகளை நாம் என்றும் அடையமாட்டோம். கடமைகளைச் செய்து தீர்த்தோமானால் உரிமைகள் தாமே வந்து சேரும். —மகாத்மா காந்தி**


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி 16 உ (31-7-65)


## அரசியல் தலையீடு

எதிர்பார்த்தபடி கல்வி மந்திரிமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்து விட்டது இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. ஆனால் அதிர்ச்சிதரும் தகவல்கள் இந்த விவாதத்தில் வெளிவந்துள்ளன. இது தான் ஆச்சரியம்.

இந்த விவாதத்திலிருந்து வெளிவந்த விபரங்களில் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்குவது பற்றியதும் ஒன்றாகும். ஆளுங்கட்சி அங்கத்தவர்களின் தொகுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுவருகிறது என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. ஆளுங்கட்சி அங்கத்தவர்களின் தொகுதியின் முன்னேற்றத்துக்காக நிதி ஒதுக்குவது உண்மையான ஜனநாயகமாகாது. ஒரு கட்சி அரசாங்கம் ஏற்படுத்துவதற்கு இவ்விதச் செயல் உதவியாக இருக்குமேயொழிய ஜனநாயகம் சிறப்புற உதவிசெய்யாது. பாடசாலைகளின் சீரமைப்புக்காயினும் ஆஸ்பத்திரிகள், சமூக சேவைகள் ஆகியவைகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சமமாக நிதி ஒதுக்கப்படவேண்டும். இதுவே ஜனநாயகம். தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள் அமைப்பதில் அந்தந்த இடத்துக்கேற்ற முறையில் சில தொகுதிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படவேண்டி நேரிடலாம். அது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்படும் நிதியாதலால் தொகுதிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியெனக்கருத இடமேற்படாது. ஆனால் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் மற்றும் சமூகசேவைகளுக்கென நிதி ஒதுக்குவதில் தொகுதிகளுக்கிடையில் பாகுபாடு காண்பிக்கப்படக் கூடாது. இவ்விஷயங்களில் எதிர்க்கட்சி அங்கத்தவர்களுடனும் அரசாங்கம் ஆலோசனைசெய்யவேண்டும். இதுவே இங்கிலாந்து போன்ற ஜனநாயகம் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் அனுசரிக்கப்பட்டு வரும் முறையாகும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது நடைபெற்ற விவாதத்தில் வெளிவந்த மற்றொரு தகவல் ஆசிரியர் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவைகளில் அரசியல் தலையீடு பற்றியதாகும். அரசியல் தலையீட்டுக்கு எம். பி.க்கள் அரசியல்வாதிகள் மீது மட்டுமல்ல ஆசிரியர்கள், பொதுமக்கள் மீதும் குற்றஞ்சாட்ட வேண்டும். எம். பி.க்களை பொதுமக்களும், சில ஆசிரியர்களும் "உத்தியோகத் தரகர்"களாக்கிவிட்டனர். தேர்தல் வாக்குகளுக்காக எம். பி.க்களும் இந்நிலைக்குத் தங்களைத் தாங்களே குறைத்துக் கொண்டனர். உத்தியோகம் பெறுவதற்கும் பதவி உயர்வு பெறுவதற்கும் உத்தியோக இடமாற்றத்துக்கும் எம். பி.களின் உதவியை மக்கள் நாடுகின்றனர். இவ்விஷயத்தில் ஆசிரியர்களே மிக மோசமானவர்கள் என்பதைச் சொல்லத்தான் வேண்டும். ஆசிரிய நியமனம் பெறுவதிலிருந்து பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவைகளில் எம் பிக்களின் உதவியை ஆசிரியர்கள் நாடுகின்றனர். இதனால் எம் பிக்கள் தகாத முறையில் நடந்துகொள்ளவும் தூண்டப்படுகின்றனர். இடமாற்ற விஷயங்களில் சில எம் பிக்கள் நியாயமான முறையில் நடந்துகொள்பவர்களென்றும் சிலர் நியாயமற்ற முறையில் நடந்துகொள்பவர்களென்றும் பெயரெடுத்துள்ளனர். இது பகிரங்க இரகசியம். உத்தியோகம் பதவி உயர்வு இடமாற்றம் ஆகியவைகளில் அரசியல் தலையீடு அதிகரித்துவிட்டபடியால் "மந்திரியைப் பிடிக்க எந்த எம் பியைப் பிடிக்கலாம்" என்ற ஆராய்ச்சி மனப்பான்மைதான் நமது மக்களிடம் இப்பொழுது அதிகரித்திருக்கிறது.

மந்திரியையும், வித்தியாதிபதி மற்றும் அரசாங்க உயர் உத்தியோகத்தர்களையும் உத்தியோக நியமனம் பதவிஉயர்வு, இடமாற்றம் ஆகிய விஷயங்களில் எம் பிக்கள் மற்றும் அரசியல்வாதிகள் நேரில் சந்தித்துத் தொல்லைகொடுக்கும் வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அப்பொழுதுதான் கல்வித்துறையிலாயினும் மற்றும் துறைகளிலாயினும் அரசியல் தலையீட்டை ஒழிக்க முடியும்.

தேசிய அரசாங்கம் இதைச் செய்யுமா? செய்யாதா? ஒரு எம். பி. அவர் எந்தத் தொகுதிக்கும் பிரதிநிதித்துவம் வகிப்பவராயினும் அவர் இலங்கை எம் பி என்பதை அவரும் பொதுமக்களும் உணர்ந்து கொள்ளவேண்டும். அவரது தொகுதி நலனல்ல; நாட்டின் நலன்தான் முக்கியம்.

94,000 ஆசிரியர்கள் இலங்கையில் உள்ளனர். இவர்களின் பதவி உயர்வு இடமாற்றம் ஆகியவை நிபுணர்களின் ஆலோசனையின் மீது திட்டமிடப்பட்டு அதை நிறைவேற்றுவது இலாகா அதிகாரிகளிடம் அல்லது அதிகாரிகள் சபையிடம் விடப்படவேண்டும். அரசியல் தலையீட்டுக்கு இடமளிக்கப்படக் கூடாது. நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது நடைபெற்ற விவாதம் இதைத்தான் தெளிவுபடுத்தியுள்ளது.

## ஜி சி ஈ வகுப்பில் பொறுக்குத் தேர்வு பரீட்சை

கொழும்பு, வெள்ளி

பொறுக்குத் தேர்வுப் பரீட்சையை ஜி சி ஈ (சாதாரண) வகுப்பில் மீண்டும் நடத்துவது பற்றி கல்வி மந்திரி ஆலோசனை செய்து வருகிறார். இவ்விப் பரீட்சை முன்னர் நடைபெற்று வந்து நிறுத்தப்பட்டிருக்கிறது.

# ஜோதிடரின் ஆலோசனைப்படியும் இடமாற்றம் நடைபெற்றது

## முந்திய அரசாங்கத்தின் நடவடிக்கை பற்றி கல்வி மந்திரி

பம்பலப்பிட்டி, வெள்ளி

'சமீபத்தில் நடைபெற்ற தேர்தலுக்கு சற்று முன்பாக கூட்டரசாங்கம் 117 ஆசிரியர்களை இடமாற்றம் செய்தது. ஓய்வுபெறும் வயதடைந்த ஒரு ஆசிரியை திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவின் ஜோதிடம் பார்க்கும் ஒருவரின் ஆலோசனையின்படி இடமாற்றம் செய்யப்பட்டார். ஜோதிடம் பார்ப்பவருக்கும் இந்த ஆசிரியைக்குமிடையே நிலவியிருந்த மனஸ்தாபம்தான் இந்த இடமாற்றத்திற்குக் காரணம். பொதுத் தேர்தலுக்குமுன் 92 பாடசாலைகள் மகாவித்தியாலயங்களாக உயர்த்தப்பட்டன. கூட்டரசாங்கத்துக்குச் சார்பான தொகுதிகளுக்கு விசேஷ நிதி ஒதுக்கப்பட்டது" கல்வி மந்திரி திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லை எதிர்க்கட்சியினர் தம்மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மீது உரைநிகழ்த்திய போது மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் சகோதரரான திரு கிளிபோர்ட் ரத்வத்தையின் வேண்டுகோளுக்கிணங்க ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டது குறித்துச் சுட்டிக்காட்டி திரு இரியகொல்லை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

முந்திய அரசாங்கம் கேகாலை, டெடிகம, திவுலப்பிட்டியா, அத்தனகலை, ஹேவாஹெட்ட, உடுநுவர, தம்புலை, வலப்பனை, தெனியாய, முல்கிரிகலை, பெலியத்தை, தம்பதெனியா, மதவாச்சி, பதுளை, கலிகமுவா, பொரளை, கொழும்பு மத்தி பகுதி, கொழும்புவடக்கு ஹோமாகம மீரிகம கட்டாரு அவிசாவலை கொட்டவ மொறட்டுவை தோம்பே லாகலை ஆகிய தொகுதிகளுக்கு போதிய அளவு நிதி ஒதுக்கியது. ஆனால் உடுவில் வவனியா மட்டக்களப்பு கல்குடா யப்பகூவா பொல்காவலை மத்துகம வெலிமடை குருநாகலை நீர்கொழும்பு பருத்தித்துறை கிளிநொச்சி புத்தளம் ஆகிய தொகுதிகள் ஒரு சதம்கூடப் பெறவில்லை'

முந்திய அரசாங்கம் பதவி வகித்தபோது தகுதியில்லாதவர்கள் ஆசிரியப் பதவிகள் பெற்றதுபற்றியும் மந்திரி சுட்டிக்காட்டினார்

## இ. போ. ச. மத்திய கமிட்டி விரைவில் கூடும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண இ போ சவின் கோரிக்கை சம்பந்தமாகவும், மற்றும் பல தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வேறுபல விஷயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தவென ஐக்கிய இலங்கை மோட்டார் சங்க வடபகுதிப் பிரதிநிதி திரு ஆர் ஆர் தர்மரத்தினமும், யாழ் மேற்கு டிப்போவைச் சேர்ந்த திருவாளர்கள் என் கந்தசாமி எஸ் சுப்பிரமணியம், கிழக்கு டிப்போவைச் சேர்ந்த திருவாளர்கள் என் நாகராசா, C ஆறுமுகம், எஸ் வேலு ஆகியோரும் பிராந்திய முகாமையாளரைச் சந்தித்தனர். மிக விரைவில் மத்திய கமிட்டியை தான் கூட்ட விருப்பதாகவும். அக்கூட்டத்தில் இது குறித்து ஆராயப்படும் எனவும் முகாமையாளர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## பயிற்சிபெற செல்கிறார்

பளை, வெள்ளி

கடந்த இரண்டு வருட காலமாக பளை தபாற் கந்தோரில் உபஅதிபராகக் கடமையாற்றி வந்த திரு ரி சிவபாதசுந்தரம் இம்மாதமுதல் தபால்சேவைப் பயிற்சி பெறுமுகமாக கொழும்பு தபால் பயிற்சிக் கல்லூரிக்கு செல்கிறார், அவரது சேவையைப் பாராட்டி இவ்வாரம் தபால்கந்தோர் ஊழியர்களால் ஓர் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது, இப்பிரிவுபசார வைபவத்திற்கு பளை தபாற்கந்தோர் அதிபர் திரு அழகரத்தினம் தலைமைதாங்கினார்.

## கல்கத்தா ஆர்ப்பாட்டம்

கல்கத்தா, ஜூலை 30

கல்கத்தாவில் டிராம்கட்டண உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த கூட்டத்தினர்மீது பொலிசார் சுட்டதில் இருவர் காயமடைந்தனர். 12 பொலிசாரும் காயமடைந்தனர். 80 பேர் கைதுசெய்யப்பட்டனர்

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 148-25 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:-

| | | |
|---|---|---|
| 06 N 0912 | 05 X 0677 | 09 B 0684 |
| 11 T 0488 | 02 E 0504 | 05 Z 0643 |
| 08 R 0824 | 03 G 0072 | 10 W 0507 |
| 03 M 0239 | 02 N 0164 | 13 M 0008 |
| 02 T 0929 | 09 S 0406 | 07 M 0513 |
| 05 W 0895 | 05 Q 0307 | 02 C 0534 |
| 02 J 0990 | 09 X 0349 | 05 T 0468 |
| 07 C 0202 | 09 K 0128 | 10 S 0057 |
| 09 L 0521 | 13 P 0194 | 13 K 0288 |
| 04 X 0432 | 06 G 0276 | 06 K 0476 |
| 08 J 0519 | 10 L 0779 | 04 Q 0401 |
| 09 T 0914 | 02 W 0526 | 09 F 0247 |
| 07 O 0806 | 06 D 0500 | 09 Y 0373 |
| 08 O 0302 | 36 Y 0063 | 01 D 0877 |
| 10 C 0468 | 10 P 0328 | 09 L 0614 |
| 04 O 0776 | 07 B 0483 | 02 C 0397 |
| 02 H 0793 | 11 Y 0700 | 06 H 0410 |
| 06 S 0072 | 05 R 0902 | 04 P 0965 |
| 08 B 0814 | 03 Q 0652 | 10 N 0615 |
| 04 O 0533 | 10 H 0373 | 02 C 0439 |
| 04 N 0990 | 09 U 0852 | 01 U 0566 |
| 03 E 0802 | 09 W 0010 | 06 Q 0034 |
| 06 Z 0018 | 07 X 0363 | 08 X 0756 |
| 01 O 0454 | 05 W 0497 | 07 O 0795 |
| 09 O 0002 | 03 C 0067 | 06 V 0674 |
| 02 X 0944 | 08 Y 0430 | 06 Q 0625 |
| 01 L 0818 | 10 F 0410 | 03 W 0949 |
| 10 J 0157 | 01 V 0185 | 04 Z 0530 |
| 07 D 0578 | 01 A 0020 | 03 T 0451 |
| 08 D 0978 | 03 R 0473 | 10 V 0851 |
| 09 T 0219 | 07 C 0192 | 01 E 0482 |
| 04 H 0600 | 06 Q 0653 | 02 M 0369 |
| 02 P 0916 | 04 K 0640 | |
| 10 U 0324 | 05 P 0649 | |

## பாவனையாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

பெர்லின் ஜூலை 30

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் சில்லறை வியாபாரத்தில் மூன்றிலொரு பகுதியைப் பாவனையாளர்கள் சங்கங்கள் சென்ற வருடம் நடத்தியுள்ளன. அவைகளுக்கு 88,000 கடைகளும், லொறிகளும், 5,500 சிற்றுண்டிச்சாலைகளும் சொந்தமாய் உள்ளன. பெருந்தொகையான தொழிற்சாலைகளும் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமாயுள்ளன. இச்சங்கங்களில் 3900 000 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

## ஐயாறன்

ஏடு துறை

"கதிர்காம முருகன் அழைக்கின்றான், காலை அதிகாலை 5 மணிக்குப் புறப்படத் தயாராக இருங்கள்" என்று ஓர் அன்பர் ஏதோ கட்டளையிடுவதுபோல் சொன்னார். "வருகிறீர்களா? வசதியுண்டா?" என்று கேட்கவில்லை

அவர் இப்படிக் கேட்டதும், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஈழத்துக்கு அளித்த விசேஷ செய்திதான் நினைவு வந்தது. "வருடத்துக்கு ஒரு முறையாவது ஈழமக்கள் அனைவரும் கதிர்காமத்துக்குச் சென்று தரிசிக்கவேண்டும். உற்சவகாலத்தில்தான் செல்லவேண்டுமென்ற அவசியமில்லை. அங்கு சென்று தரிசிப்பதால் உங்கள் கவலை, துக்கம் எல்லாம்நீங்கி, எல்லா நலன்களும் ஏற்படும்" என்று பெரியவாள் கூறியிருந்தார். கதிர்காமம் சென்று சரியாக ஒரு வருஷமாவதற்குள் முருகனே இந்த அன்பர்மூலம் அழைக்கின்றான் என்று கருதி அவர் அழைப்பை ஏற்றேன்.

அன்பர், நாள் நட்சத்திரம் எல்லாம் மிகக் கவனமாகப் பார்ப்பவர். காலை 6 மணி 2 நிமிஷத்துக்குப் புறப்படவேண்டுமென்றும் அப்போதுதான நேரம் சரியாக இருக்கிறதென்றும் கூறினார். ஆனால் அன்று அஷ்டமி நவமி என்பதைக் கவனிக்கவில்லையாம்! இப்பெரிய தவறை அறிந்ததும் மிக வருந்தினார். என்றாலும் புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டதால் முருகனை விசேஷமாகப் பிரார்த்தித்து குறித்த நேரத்துக்குப் புறப்பட்டுவிட்டோம். அஷ்டமி நவமி ஏதும்செய்யுமோ என்று மனதுக்குள்ளாக சற்றே அச்சம்தான், ஆனால் எவ்வித இடையூறுமில்லாமல், கொழும்புக்கு பத்திரமாகத் திரும்பியதும், "நாள் என்செயும் வினைதான் என்செயும் எனை நாடி வந்த கோள் என் செயும் கொடுங்கூற்று என்செயும் குமரேசர் இருதாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமும், தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே" என்ற அருணகிரிநாதரின் வாக்கு முற்றும் உண்மை என்பதை உணரக்கூடியதாக இருந்தது. எல்லாம் வல்ல முருகனுக்கு இந்தக்கோள்களின் தீமையிலிருந்தும் நம்மைக் காக்க முடியாதா!

• • •

எங்களுடன் காரிலே வந்தவரொருவர் நெற்றியிலே திருநீறும், கழுத்தில் தங்கச்சங்கிலியில் கட்டிய ஒரு பெரிய ருத்ராட்சமணியும் அணிந்து சைவப்பொலிவுடன் காணப்பெற்றார். அவர் ஒரு சிங்கள பௌத்தரென்றும் பெயர் "ஸ்ரீமகா" என்றும் அறிந்ததும் வியப்பாக இருந்தது. இக்காலத்தில் கழுத்திலே ஒரு பெரிய ருத்ராட்சமணியை சைவர்களே அணிவது அரிது. அப்படியிருக்க அச்சிங்களவர் அணிவதெப்படி என்று விசாரித்தேன்.

ஒரு கோவில்குருக்கள் இதை அணியுமாறு தனக்கு அளித்ததாயும், 7 வருடகாலமாக இதை அணிந்துள்ளதாயும், கொழும்பிலிருந்து கால் நடையாக 1952-ம் வருடத்தில் ஒரு கோஷ்டியாருடன் தாம் கதிர்காமயாத்திரை சென்றதாயும், சேவற்கொடி பிடித்துச் செல்லும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததாயும் தமது ருசியான அனுபவங்களை ஆங்கிலத்தில் கூறினார். முருகநாம பஜனையை காரில் செய்துகொண்டே வந்தார்; இப்படியான ஒரு சிங்களவரைக் கண்டதும் நம்ப முடியவில்லை, முருகனைப்பற்றி சம்ஸ்கிருதத்தில் பல பல சுலோகங்களையெல்லாம் சொல்லிவந்தார். அவருக்குத்தான் எவ்வளவு முருகபக்தி. நல்லூர் கோவிலில் திருவிழா நடப்பதாயும் இங்கு வந்து முருகபஜனை செய்யுமாறும்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கேட்டேன். வெகுகாலமாக நல்லூர்வந்து தரிசிக்கவேண்டுமென்ற விருப்பம் தமக்கு உண்டென்றும், இம்முறை முடிந்தால் வருவதாகவும் சொன்னார். ருத்ராட்சம் அணிந்த சிங்கள பௌத்தர், நல்லூர் வந்து திருவிழாவிலே பக்தியுடன் முருகநாம பஜனை செய்தால் அது எப்படி இருக்கும். வகுப்புத்துவேஷம் அத்தத்திக்கிலும் தலைகாட்டுமா?

• • •

முன்னம் அவனுடையநாமம் கேட்டாள் மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள், அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத், தன்னை மறந்தாள் தன்நாமங்கெட்டாள் தலைப்பட்டாள் நங்கைதலைவன் தானே.

—அப்பர்சுவாமிகள்

# வியட்னும் சண்டையை நிறுத்த மண்டல

# சார்பற்ற நாடுகள் முயற்சி

## டிட்டோ-சாஸ்திரி ஆராய்கின்றனர்

### அமெரிக்க குண்டு வீச்சுக்கு யூகோ. அதிபர் கண்டனம்

பிரியோனி, ஜூலை 30

ஜனாதிபதி டிட்டோவும் திரு. சாஸ்திரியும் இன்று மீண்டும் நடத்தும் பேச்சுகளில் வியட்னும் சண்டையை நிறுத்துவதற்கு மண்டலசார்பற்ற நாடுகள் எவ்வகையில் உதவ முடியும் என ஆராய்கிறார்கள்.

நேற்று இரு தலைவர்களும் சுமார் 5 மணிநேரம் பேச்சு நடத்தினர். அப்போது யூகோ பிரதமர் திரு. ஸ்டம்போலிக்கும், திரு. சுவர்ண்சிங்கும் உடனிருந்தனர். டிட்டோ அளித்த தனிப்பட்ட பகல் விருந்தின்போது இப்பேச்சுகள் இடம்பெற்றன.

வியட்னுமில் சண்டையை நிறுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் சம்பந்தமாக டிட்டோ, சாஸ்திரி ஆகிய இருவரும் இதர மண்டலசார்பற்ற நாடுகளையும் கலந்தாலோசிப்பார்கள் எனத் தெரிகிறது. வருகிற நவம்பர் மாதம் அல்ஜீயர்ஸில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டிலும் இவ்விஷயம் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

நேற்றைய பேச்சுவார்த்தையில் திரு. டிட்டோ பேசியபோது சமீபத்தில் வடவியட்னும் எண்ணெய்த் தளங்கள் மீது அமெரிக்க விமானங்கள் வெடிகுண்டுகளை வீசியது நிலைமையை மோசமாக்கிவிட்டதென்றும் இதனால் சமாதானப் பேச்சுக்குத் தடங்கல் ஏற்பட்டுவிட்டதென்றும் குறிப்பிட்டார்.

தாம் ரஷ்யப்பிரதமர் கோஸிஜினை சமீபத்தில் சந்தித்தபோது அவர் வடவியட்னும் மீது குண்டுவீச்சு நீடிப்பது சமாதானப் பேச்சுக்கு குந்தகம் விளைவிப்பதாகக் கருத்து தெரிவித்தார் என்றும் டிட்டோ குறிப்பிட்டார்.

குண்டுவீச்சு நிறுத்தப்பட்டால் வடவியட்னுமை சமாதானப் பேச்சுக்கு அழைக்கும் சாத்தியம் வெற்றிபெறக்கூடுமென யூகோ வட்டாரங்கள் கருதுவதாய்த் தெரிகிறது.

அமெரிக்கா என்னுவது ஒருநாள் வியட்னுமை விட்டு வெளியேறியே தீர வேண்டும் என்றும் இல்லாவிட்டால் ரஷ்ய-அமெரிக்க மோதல் ஏற்படும் என்றும் சிலர் கருதுகிறதாம்.

தற்போது ஹானேய் சென்றிருக்கும் கானா பிரதிநிதிக்கு நல்ல வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என யூகோ கருதுகிறது.

கானா வெளியிட்டப்பட்டிருக்கும் டிட்டோ-சாஸ்திரி கூட்டறிக்கையை இருநாட்டு அதிகாரிகளும் இப்போது தயாரித்து வருகிறார்கள்.

திரு. சாஸ்திரி டில்லி திரும்பும் வழியில் கெய்ரோவில் தங்கி, ஐக்கிய அரபுக் குடியரசு உபஜனாதிபதி திரு. பௌனியுடன் தாம் விட்ட சம்பாஷணையைத் தொடர்ந்து நடத்துவார் என அறிவிக்கப்படுகிறது.

வியட்னுமில் பேச்சுவார்த்தை மூலம் அமைதியை ஏற்படுத்த ஐ. நா. தன் செல்வாக்கையும் சக்தியையும் பயன்படுத்த வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் விடுத்த வேண்டுகோளைத் தாம் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தலைமைக்காரியதரிசி யுதாண்ட் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா.வில் அமெரிக்க நிரந்தர தலைமைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. கோல்ட்பர்க், தமது நியமனப் பத்திரத்தை யுதாண்டிடம் சமர்ப்பித்த அதே சமயம் ஜனாதிபதி ஜோன்ஸனின் கடிதத்தையும் சமர்ப்பித்தார்.

ஐ. நா, வியட்னுமில் தனது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டுமென யுதாண்டிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஜனாதிபதி ஜோன்ஸனின் வேண்டுகோள் குறிப்பிடுகின்றது.

திரு. ஜோன்ஸனின் கடிதத்தைத் தாம் கவனமாகப் பரிசீலிப்பதாக யுதாண்ட் திரு. கோல்ட்பர்க்கிடம் கூறினர். மேலும் பல விஷயங்கள் பற்றியும் தலைமைக்காரியதரிசியும், அமெரிக்க தலைமைப் பிரதிநிதியும் பேசியதாக அறிவிக்கப்படுகிறது.

ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டுவதுபற்றி யுதாண்ட் திரு. கோல்ட்பர்க்கிடம் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

## 4000 அமெரிக்க துருப்புகள் வியட்னுமில் இறங்கினர்

சைகோன், ஜூலை 30

தென்வியட்னுமுக்கு உடனடியாக ஐம்பதினாயிரம் துருப்புக்கள் அனுப்பப்படுவார்கள் என ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்ததைத் தொடர்ந்து, இன்று 4000 அமெரிக்கத் துருப்புக்கள் கரையிறங்க ஆரம்பித்துவிட்டனர் என்றும், சைகோனுக்கு 160 கிலோ மீட்டர் தூரத்தில் அவர்கள் இறங்கினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் தலைநகரிலிருந்து 160 கிலோ மீட்டர் தூரத்தில் அமெரிக்க விமானப் படையும், கடற்படையும் நடத்திய தாக்குதலில் 200 கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ஜோன்ஸனின் அறிக்கை பற்றி லண்டனிலும் பாரிசிலும் அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்கள்.

ரஷ்யா உலக மக்களைக் காட்டிக்கொடுத்துவிட்டதாகவும், வியட்னும் விஷயத்தில் அது அமெரிக்காவுடன் சேர்ந்து இரகசியமாக வேலை செய்துவருவதாயும் சீனு குற்றம் சாட்டியிருக்கிறது.

---

### வெளிநாடு செல்லும் கலைஞர்கள்

பெர்லின் ஜூலை 30

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசைச் சேர்ந்த நாடக மேடை நடிகர்களும் ஏனைய கலைஞர்களும் கடந்த 6 மாதங்களில் வெளிநாடுகளில் 4,700 கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச்சேர்ந்த 110 சங்கீத வித்வான்கள் 22 நாடுகளில் 204 சங்கீத கச்சேரிகளை நடத்தியுள்ளனர்.

1965—66 ல் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் நாடக, சங்கீதக்கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு 23 நாடுகளைச் சேர்ந்த 114 கலைஞர்கள் முன்வந்துள்ளனர்.

**பிரிட்டன்**

### கண்டனத் தீர்மானம் தோற்றது

லண்டன், ஜூலை, 30

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் ஒன்று 21 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. பிரிட்டனின் பிரச்னைகளைக் கையாள்வதில் வில்சன் அரசாங்கம் திறமையற்றிருப்பதாக இந்தத் தீர்மானம் கூறியது. திரு. வில்சன் இந்த விவாதத்தில் ஒப்பற்ற திறமையை வெளிப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டது.

வருகிற திங்கட்கிழமை புதிய கன்சர்வேட்டிவ் தலைவர் திரு. ஹீத் மற்றொரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவரவிருக்கிறார், இதற்குத் தயாராகும் பொருட்டு பிரதமர் வில்சன் தமது சுவீடிஷ் பிரயாணத்தை ஒத்திவைத்திருக்கிறார்.

---

**கல்கத்தா ஆர்ப்பாட்டம்**

### 8 டிராம்கள் கொளுத்தப்பட்டன

கல்கத்தா, ஜூலை 30

டிராம் கட்டணம் உயர்த்தப்பட்டதை எதிர்த்து கல்கத்தாவில் நேற்று 4 வது நாளாகவும் பலாத்கார ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் 8 டிராம்வண்டிகளைக் கொளுத்தினர். டிராம்களுக்குத் தீவைக்க முயல்பவர்கள் இனி சுடப்படுவார்கள் என பொலிஸ் கமிஷனர் அறிவித்திருக்கிறார்.

ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து ஜோதிபாஸ் உட்பட பல இடதுசாரித் தலைவர்கள் நேற்று காவலில் வைக்கப்பட்டார்கள். 9 இடதுசாரிக் கட்சிகள் இன்று பொதுவேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.——

### மாடுதிருட முயன்றனர்

கல்கத்தா, ஜூலை 30

மேற்குவங்க எல்லையில் ஆயுதம் தரித்த பாகிஸ்தானியர் அத்துமீறிப் பிரவேசித்து மாடுகளைக் கடத்த முயன்றனர் என்றும், அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் ஒரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

### பாகிஸ்தான் இணக்கம்

புதுடில்லி, ஜூலை 30

கட்ச் சம்பந்தமாக இந்திய-பாகிஸ்தான் மந்திரிகள் கூட்டம் அடுத்த 20-ம் திகதி நடைபெறவேண்டும் என்ற யோசனையை பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. நேற்று இருநாட்டு பொலிஸ் அதிகாரிகளுக்கிடையே பேச்சுக்கள் ஆரம்பமாகின.

---

### கென்யா-சீன தூதராலயம்

நைரோபி, ஜூலை 30

கென்யாவிலுள்ள சீனத் தூதராலயத்தை மூடும்படி கேட்குமாறு, கென்யா எதிர்க்கட்சி அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது. இது ஒரு சதிகாரக் காரியாலயமாய் விளங்கப்படுவதாக அது குற்றஞ்சாட்டியிருக்கிறது.

### செவ்வாய்க்கிரகத்தில் 10,000 எரிமலைவாய்கள்!

கேப்கென்னடி, ஜூலை 30

"மரீனர் 4" எடுத்த எல்லா செவ்வாய்க்கிரகப் படங்களும் பிரசுரிக்கப்பட்டுவிட்டன. இந்தப்படங்களை ஆராய்ந்ததில் அங்கு உயிரினம் கிடையாது என்று தெரிவதாய் விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டனர்.

10,000க்கு மேற்பட்ட எரிமலைவாய்கள் செவ்வாய்க்கிரகத்தில் இருப்பதாயும், பூமியைப்போல் அல்லது சந்திரனிலுள்ளதைப் போன்ற வெடிப்புக்கள் அதில் இருப்பதாயும் அவர்கள் மேலும் கூறினர்.

ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று "மரீனர் 4" விஞ்ஞானிகளுக்கு பதக்கங்களை வழங்கினார்.

## சீனுவில் தளங்கள் அமைக்க இடமளியோம்

### ரஷ்யாவுக்கு பீகிங் மறுப்பு

நியுயோர்க், ஜூலை 30

வியட்னுமில் மேற்கொண்டு இராணுவ நடவடிக்கையை உடன்நிறுத்த, ஒருங்கிணைந்த முயற்சி வேண்டும் என யுதாண்ட், அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுதயுள்ள கடிதத்தில் கூறியிருக்கிறார்.

அங்கு அமைதிப் பேச்சுக்களை நடத்த ஐ. நா. தன்னாலியன்றவரை முயற்சிக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நேற்று லண்டனில் பிரதமர் வில்சன் பேசியபோது, வியட்னுமில் ஐ. நா. வின் குறுக்கீடு பலனளிக்குமானால் பிரிட்டன் அதை ஆதரிக்கும் என்றார். ஆனால் இதற்காக பிரிட்டன் எடுத்த பல முயற்சிகள் பலனளிக்கவில்லையென்றும் திரு. வில்சன் தெரிவித்தார், வியட்னுமில் அமெரிக்கா படைபலத்தை அதிகரித்திருப்பது பற்றி அவர் வருத்தம் தெரிவித்தார்.

**ஹோசிமின்**

வடவியட்னும் அதிபர் ஹோசிமின் விடுத்த அறிக்கை ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி சமாதானம்பற்றிப் பேசும் அதேவேளையில் சண்டையையும் விஸ்தரித்துவருவதாய்க் கூறியிருக்கிறார். அவரது சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமில்லையென்றும் டாக்டர் ஹோ கூறினர்.

**இரு கண்டனம்**

வியட்னுமுக்கு 50 ஆயிரம் துருப்புக்களை அனுப்புவதென்ற அமெரிக்க முடிவு மற்றோர் பாரதூரமான நடவடிக்கை என நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இதுபற்றிக் கண்டனம் தெரிவிக்கின்றன.

**ரஷ்யாவுக்கு மறுப்பு**

இதற்கிடையில் சிக்கியாங், யூனன் ஆகிய இரு சீன மாகாணங்களில் வடவியட்னுமுக்கு உதவும்பொருட்டு ரஷ்யத் தளங்கள் அமைக்க அனுமதி கோரப்பட்டிருந்ததென்றும், ரஷ்யாவின் நோக்கம்பற்றி அதுகொண்டிருக்கும் சந்தேகமே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

**தாக்குதல்**

அமெரிக்க, தென்வியட்னும் துருப்புக்கள் நேற்று மேக்காங் நதிப்படுகையில் நேற்று வியட்காங்கியரைச் சூழ்ந்துகொண்டு விட்டனர் என்றும் இதில் 102 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. அமெரிக்க விமான, தரைப்படைகள் இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்தன.

நேற்று வடவியட்னும் ஏவுகணைத் தளங்களைக் குண்டு வீசித் தாக்கிய... பிடித்த ஒரு அமெரிக்க உளவு விமானம், ஏவாயுதம் மூலம் சுட்டுத்தள்ளப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

### விவசாயம் பற்றி விவாதஅரங்கு

லைப்சிச், ஜூலை 30

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் லைப்சிக பல்கலைக்கழகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஒரு விவாதஅரங்கில் இந்தியா உட்பட 10 நாடுகளின் விவசாய நிபுணர்கள் கலந்துகொண்டனர். வளர்ச்சி பெறும் நாடுகளின் விவசாயக் கூட்டுறவு இயக்கம் என்ற பிரச்னைபற்றியே இந்த விவாத அரங்கு நடைபெற்றது. மண்வள விஞ்ஞானம், தாவரங்களைப் பாதுகாத்தல், தாவரப் பசளை, கமம் செய்தல், விவசாயத்தில் தொழில்நுட்பம், கால்நடை வளர்ப்பு, கிருமிகளை நாசம்செய்தல், காடுவளர்த்தல் முதலியவை பற்றி ஆங்கிலத்திலும், ஜெர்மன் மொழியிலும் விவாத அரங்கில் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

---

### பாப்பரசரிடம கௌரவப் பட்டம்

பெர்லின் ஜூலை 30

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வசிக்கும் ஜெர்மன் பாசிஸ்ட் எதிர்ப்பு வீரரான பிரான்ஸ் பிரேஸ்லர் என்பவருக்குப் பாப்பரசர் "நைட்" கௌரவப்பட்டம் வழங்கி கௌரவித்தார். பாப்பரசர் சார்பாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு மேற்றிராணியார் ஸ்குவெல்பக் இப்பட்டத்தை பிரேஸ்லருக்கு வழங்கினர். நாஸி படையிற் சேர்க்கப்பட்ட பிரேஸ்லர் 1942 ல் போலந்துக்கு அனுப்பப்பட்டார். வார்சா நகரில் யூதர்களை சுட்டுத்தள்ள அவர் மறுத்தால், நாஸிகள் அவரை அடித்து சிறைக்கூடத்தில் அடைத்தனர். அங்கும் யூதர்களை மரணத்தில் இருந்துகாக்க அவர் உதவி செய்தார் அவரது துணிச்சலையும் சேவையையும் பாராட்டி பல நாடுகளிலிருந்து பாப்பாண்டவருக்குக் கடிதங்கள் கிடைத்துள்ளன.

---

### கண்காணிப்பு உத்தியோகஸ்தர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கள்ளக்கடத்தல், சட்டவிரோதக்குடியேற்றம் முதலியவற்றை கண்காணிக்கும் வேலைகளை கவனிக்க பொறுப்பதிகாரியாக திரு. மெண்டிஸ் ஜெயவீரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் புத்தளத்தில் கடமையாற்றியவராவர்.

# குறைந்த வயதில் திருமணம் சனத்தொகை பெருகுவதற்கு காரணம்

உடுப்பிட்டி, வெள்ளி

"இலங்கையை தமிழ் சிங்கள மன்னர்கள் ஆட்சிசெய்த காலத்தில் அதன குடிசனத் தொகையும் விவசாய விருத்தியும் இப்போது உள்ளதைவிட அதிகமாகக் காணப்பட்டன என்று வரலாறு கூறுகிறது. ஆயிரக்கணக்கான நீர்த்தாங்கிகள் அன்று கட்டப்பட்டு பயிர்நிலங்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டது. மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதும் அதன் வடிநிலத்தை விருத்திசெய்வதும் மிகச்சிறந்த அபிவிருத்தித் திட்டங்களாகும்" இவ்வாறு திரு. பி. புவனராஜன் நெல்லியடி அரசினர் மகாவித்தியாலய புவியியல் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட புவியியல் ஆய்வுச் சொற்பொழிவுகளில் கலந்து 'இலங்கைக் குடித்தொகையும் கைத்தொழில் பற்றிய பிரச்னைகளும்' பற்றிப் பேசுகையில் கூறினர்.

திரு புவனராஜன் தொடர்ந்து கூறியதாவது:-

"இலங்கையில் ஆரம்பத்தில் குடிமதிப்பு எடுக்கப்பட்டபோது 81,7000 மக்களும் 1808-ம் ஆண்டு தொடக்கம் 1810-ம் ஆண்டுவரையில் 800,000 மக்களும் இருந்தனர் 1871-ம் ஆண்டுதான் ஒழுங்குமுறையாக குடித்தொகை கணிக்கப்பட்டது, வருங்காலத்தில் இலங்கையின் சனத்தொகை மிகவும் பெருகப்போகிறது. அதைச் சமாளிக்கக்கூடிய பொருளாதார வளம் இங்கில்லை. பிறப்பு விகிதம் கூடுவதற்குச் சில காரணங்களுண்டு. இலங்கையில் வயதுவந்த பெண்களைக் கட்டாயம் மணம் முடித்துக் கொடுக்கவேண்டும் என்ற வழக்கம் இருக்கிறது இதனல் குறைந்த வயதிலேயே திருமணங்கள் நடைபெற்றுக் குழந்தைகளும் பெருகுகின்றன. இறப்பவர்களைவிடப் பிறப்பவர்களின் தொகை மிகவும் அதிகரித்துள்ளது!

இங்கு 15—18 வயதிற்குட்பட்ட இளமைப்பருவத்தினரின் தொகையும் அதிகரித்துள்ளது. இவர்களுக்குவேண்டிய கல்வி முதலிய வசதிகளைச் செய்வதிலேயே அரசாங்கத்தின் பணம் மிகவும் வற்றிவிடுகிறது. இவ்வயதினர் நாட்டின் பொருளாதார விருத்திக்கும் உதவுவதில்லை.

வரவரக் கட்டடங்கள் கட்டப்படும் நிலம் அதிகரித்து வருவதால் விவசாயத்திற்கு நிலம் குறைகிறது. விவசாயத்தை எந்திரங்களின் உதவிகொண்டு செய்யவேண்டும். இலங்கையில் மொத்தம் 5,50,000 கீ. மின்சக்தியுண்டு ஆனல் குறைந்தளவே தற்பொழுது பாவனையில் உள்ளது. நீர் மின்சக்தியை விருத்திசெய்வதால் குடிசைத் தொழிலையும் விவசாயத்துறையையும் யந்திரமயமாக்கலாம் இயந்திரப் பயிர்ச்செய்கையினால்தான் மேலைநாடுகள் பொருளாதாரத்துறையில் மிகவும் முன்னேறியுள்ளன'

'இந்திய குடித்தொகையும் விவசாயம் பற்றிய பிரச்னைகளும்' பற்றி திரு ஆர் எஸ் தம்பையா பேசுகையில், 1961ம் ஆண்டு 43.6 கோடி மக்கள் இந்தியாவில் வசித்தார்கள். இன்று அங்குள்ள சனத்தொகை மிகவும் அதிகரித்துள்ளது. இந்தியாவில் 70 தேவிகிதத்தினர் விவசாயிகள். 15 சதவிகிதத்தினர் நகரவாசிகள் சனத்தொகை அதிகரிப்பைச் சமாளிப்பதற்கு விவசாயம் மாத்திரம் போதாது. கைத்தொழில் அபிவிருத்தியும் ஏற்படவேண்டு"மென்றும் கூறினர்.

'படங்களின் மூலம் வட கிழக்கு அமெரிக்க நாடுகளின் வரலாற்றுப் புவியியல்' பற்றிச் சொற்பொழிவாற்றிய திரு. நீச்சாட் ஆரம்பகாலத்தில் இருந்ததைவிடக் கண்டங்களின் அமைப்பும், தோற்றமும் தற்போது எவ்வாறு மாறியுள்ளதென்பதையும், மக்கள் தொகை அதிகரிப்பு, விவசாயப் பெருக்கம், படிப்படியான முன்னேற்றம் பற்றும், பூகோளப்பட உதவியுடனும், உருவப்படங்கள் மூலமும் தெளிவாக விளக்கப்படுத்தினர்.

'பட எறியங்களின் இயல்' பற்றிக் கலாநிதி டபிள்யு எம் ஜெயசிங்கமும், 'மூவகை நில அமைப்புகள்', பற்றி திரு சி மனோகரனும் உரைநிகழ்த்தினர். வடமராட்சியின் பல பாகங்களிலுமுள்ள கல்லூரிகளிலிருந்தும் மாணவ மாணவிகள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

செல்வன் ரி விக்னேஸ்வரதாசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. மன்றச் செயலாளர் செல்வன் என் வேலாயுதன் தமது நன்றியுரையில் புவியியல் மன்ற ஸ்தாபகர் திரு டபிள்யூ ஆர் அருணையாவுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### சனி 31-7-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 வாய்ப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 செய்திச் சுருள், 7-00 சங்கீதக்கச்சேரி 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கருத்துரை, 9-30 விமர்சனம், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 1-8-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 தமிழோடிசை பாடல், 8-00 மௌனத்தாஞ்சலி, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் பாடசாலை, 9-30 பழப் பாட்டுக்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மத்தாப்பு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 4-15 பாட்டு. 5-45 திரை இசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 நாளவாத்தியக் கச்சேரி. 6-45 நேயர் கடிதங்கள், 7 00 பாட்டு 7-30 நாடகம். 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மனைவிளக்கு—மாதர் நிகழ்ச்சி 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை.

---

## பளை மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டி

பளை, வெள்ளி

பளை மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

மேற்பிரிவு சாம்பியன் ஆண்கள்- மா சிவானந்தராசா (நீல இல்லம்), பெண்கள்- செ. தவபாக்கியம் (நீல இல்லம்).

மத்தியபிரிவுசாம்பியன் ஆண்கள்- க சிவராசா (சிவப்பு இல்லம்), பெண்கள்- சு. மேரி புனேனு (நீல இல்லம்).

கீழ் பிரிவு சாம்பியன் ஆண்கள்- கி. மருதலிங் (மஞ்சள் இல்லம்), பெண்கள்- சி தகைவதி (சிவப்பு இல்லம்)

பாலர் பிரிவு ஆண்கள்- அ செல்வம் (நீல இல்லம்), பெண்கள்- க. ஞானேஸ்வரி (மஞ்சள் இல்லம்)

இப்போட்டியில் சிவப்பு இல்லம் 208 புள்ளிகளைப் பெற்று இல்லங்களுக்கான முதலிடத்தைப் பெறறது மஞ்சள் இல்லம் 206 புள்ளிகளையும் நீல இல்லம் 194 புள்ளிகளையும் பெற்றன.

போட்டி ஆரம்பத்தில் மகாவித்தியாலய அதிபர் திரு. வி. செல்லையா மாணவரின் அணி நடை மரியாதையை யேற்று கொடியேற்றிவைத்தார். கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து வெற்றி பெற்ற மாணவருக்குப் பரிசில்களை வழங்கினர்.

---

## பாராட்டு விருந்து

சுழிபுரம், வெள்ளி

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ, நாடக மன்றத்தினர் பல போட்டிகளில் முதல் இடம் பெற்றதைப் பாராட்டி ஓர் தேநீர் விருந்து வைபவம் பண்டத்தரிப்பு பொது சேவை சங்கத்தினரால் நடாத்தப்பட்டது, ஆசிரியர் எஸ. குலசிங்கம், பி. பீரஸ், செல்வி க. சுகிர்தமலர் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர்.

---

## ஐக்கிய முன்னணி: பல கட்சித் திட்டம்

பேர்லின், ஜூலை 30

"ஜெர்மனியில் சோவியத் பகுதியில் 20 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட பாஸிஸ்ட்-எதிர்ப்பு ஜனநாயக முன்னணிதான் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தற்போதைய பல கட்சித் திட்டம் உருவானதற்குக் காரணமாகும்" என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பாராளுமன்ற சபாநாயகர் திரு. டிகமன் கூறினர்.

யுத்தம் முடிந்தபொழுது இங்கு நான்கு கட்சிகள் இருந்தன. கம்யூனிஸ்ட் கட்சியும் சமூக ஜனநாயகக் கட்சியும் ஒன்றாக இணைந்து ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி, கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, லிபரல் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக விவசாயிகள் கட்சி ஆகிய நான்கும் பின்னர் நிறுவப்பட்ட தேசிய ஜனநாயகக் கட்சியும் சேர்ந்து "ஜனநாயகமுன்னணி" என்றும் ஐக்கிய முன்னணியை நிறுவின. முன்னணியில் சேர்ந்திருந்தாலும் இக்கட்சிகள் தனித் தனியாகவே இயங்குகின்றன. ஆயினும் அவை தத்தம் கட்சியின் நலனைவிட ஐக்கிய முன்னணியின் நலனையே முக்கியமாகக் கருதுகின்றது.

---

## அகில ஜெர்மன் சபை

ரோஸ்டொக், ஜூலை 30

அகில ஜெர்மன் சபை நிறுவவேண்டுமென்ற கோரிக்கையை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஜனதிபதி உல்பிரிச் மீண்டும் இங்கு வற்புறுத்தினர். ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவதற்கு இதுதான் ஒரே வழியென்றும் அவர் கூறினர்.

எல்லா நாடுகளும் இரு ஜெர்மன் ராஜ்யங்களுடனும் சமூக உறவு கொண்டால் மேற்கு ஜெர்மன் அகில ஜெர்மன் சபை நிறுவுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வருமென்று அவர் தெரிவித்தார்.

---

## வருடாந்த விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, வெள்ளி

உடுத்துறைத் தமிழ்க்கலவன் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் இப்போட்டி விழாவிற்குத் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## வரட்சிக்குப்பின் மழை

சுழிபுரம், வெள்ளி

நீண்ட நாட்களுக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு இடியோடு கூடிய மழை பெய்தது. இரவு ஒன்பது மணியளவில் பலத்த மின்னலும் முழக்கமும் ஏற்பட்ட பின்னரே மழை பெய்தது. தொடர்ந்தும் மழை பெய்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

---

## தெய்வமகன் வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

"காவேந்தன்" எழுதிய "தெய்வமகன்" நூல் வெளியீட்டுவிழா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரர் வித்தியாலய மண்டபத்தில் நாளை மாலை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். வி மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். நகரபிதா எஸ். சி மகாதேவா விழாவை ஆரம்பித்துவைப்பார், பொன் முத்துகுமாரன் நூல்வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

பண்டிதர் க. கச்சிதானந்தன், கோப்பாய் எம். பி. சி கதிரவேற்பிள்ளை, வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ அமிர்தலிங்கம், வலிவடக்கு காரியாதிகாரி, திரு. தி. முருகேசம்பிள்ளை, கே. சண்முகநாதன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்

---

## பரீட்சை நடைபெறவில்லை?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரும்பாக மோட்டார் போக்குவரத்து அதிகாரியின் கந்தோரில் நேற்று வீதி ஒழுங்குமுறைகளிலும் மோட்டார் இயந்திரம் சம்பந்தப்பட்ட வாய்மூலப் பரீட்சைக்கும் அழைக்கப்பட்டவர்கள் பரீட்சிக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

மாலை இரண்டு மணிக்குப் பரீட்சைக்காக யாழ்ப்பாணக் கச்சேரியில் கூடிய மனுதார்கள் மாலை 4 மணி சென்றும் பரீட்சிக்கப்படாது மிகவும் விசனத்துடன் வீடு திரும்பினர்

இப்பரீட்சைகளை நடத்துவதற்கு உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையே காரணமெனத் தெரியவருகிறது,

---

## விளையாட்டு சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ், வளையாட்டு வல்லுநர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. இ. சபாலிங்கம் தலைமையின் கீழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. திரு இ சபாலிங்கம் மீண்டும் இச்சங்கத்திற்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வருடத்திற்கான உத்தியோகஸ்தர்கள்:-

போஷகர்-டாக்டர் ஜே எஸ் அமரசிங்கம், உபபோஷகர்கள் - திரு ஜீ ஜீ பொன்னம்பலம், திரு வான் சண்டன், திரு ஏ ஈ தம்பர், திரு எஸ் சி மகாதேவா. திரு பி ஆர் தம்பிஜயா, தலைவர்- திரு இ சபாலிங்கம், உப தலைவர்கள்- திரு ரி சேனாதிராசா, திரு ரி ஆலாலசுந்தரம், திரு இ கனகலிங்கம், டாக்டர் ஜே சி துரைசிங்கம், திரு ரி ஐ ஆபிரகாம், திரு கே இராசையா. காரியதரிசி- திரு ஆர் சச்சிதானந்தன். உப காரியதரிசி-திரு ஈ கே குமரையா. தனாதிகாரி- திரு மகேந்திரன். நிலமைப் போஸ்-திரு கே இராசையா, கணக்குப் பரிசோதகர்- திரு ஏ சோமாஸ்கந்தர்

தர்மகர்த்தா சபையிலுள்ள கழகங்கள்- பொலிஸ் விளையாட்டுக் கழகம், ஜே ரி எப் சி, பலாலி பயிற்சிக்கலாசாலை, வை எம் ஜீ கழகம், கிறுல் கொப்பால் கழகம், கிறீன் பீல்ட் கழகம், வ் டி ஜெயரட்ணசிங்கம், எஸ் ஜீ தேவா.

---

## நாடக அரங்கேற்றம்

பளை, சனி

பளை இரட்டைக்கேணி அம்பாள்கோவிலில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள பொது மேடையில் 'புள்ளிமான் தந்த பொருட்காட்சி' என்னும் நாடகம் இன்று பெரியபளை மக்களால் அரங்கேற்றப்படும். இவ் அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு திரு. கந்தையா பொன்னையா தலைமை தாங்கவிருக்கிறார்.

---


## வரி விளம்பரம்

### தேவை

பத்திரிகை விநியோகம்செய்வதற்கு ஆள் தேவை. சைக்கிள் வைத்திருப்பவர் மட்டும் நேரில் வரவும் மற்றவை நேரில். N S. திருநாவுக்கரசு, 56, பஸ்நிலையம், யாழ்ப்பாணம் 712

மசகிடும் சேவையில் (சர்விஸ் ஸ்டேசனில்) வேலைசெய்து அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமூகமளிக்கவும். விக்டோ ஒயில் கேசவி சேர்விஸ் பலாலி வீதி கோண்டாவில். 715

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சொமசெட் கார் விற்பனைக்குண்டு. பார்வையிடலம் 418, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 718

### வீடு வாடகைக்கு

பரமேஸ்வரக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி ஆகியனவற்றிற்கும், பஸ் தரிப்பு நிலையங்களுக்கும் அண்மையில் வீடொன்று வாடகைக்கு உண்டு விபரங்களுக்கு மு நாகலிங்கம், 66, பலாலி ரோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். 714

### இடமாற்றம்

உரும்பிராயில் இருந்த சித்த ஆயுர்வேத டாக்டர் S A. இராசையா L.I.M., ஆவணி முதல் நல்லூர் டெம்பிள் ரோட் 174 ம் இ. வீட்டில் வசிப்பார். வைத்தியம் செய்யவேண்டியவர்கள் கலந்துகொள்ளலாம் 657

### கல்வி

அப்போதிக்கரி, தபால் தந்தியாளர், புகையிரத நிலையத் தலைவர் ஆகிய பரீட்சைக்கு முதலாம்திகதி தொடக்கம் மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பி. ஏ., ஜி ஏ கியூ. வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**யாழ். டியூட்டோறியல் கல்லூரி,** கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 679

**தொய்வு, கசம், நீரழிவு, வெண்மை** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.


---

## மஹரகம வென்றது

யாழ்ப்பாணம், சனி

பலாலி, மஹரகம பயிற்சிக் கலாசாலைகளுக்கிடையில் பலாலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டப்போட்டியில் மஹாரகம பயிற்சிக்கலாசாலை நேரடியாக வெற்றியீட்டியது. புள்ளிகள்: 15 : 9; 15 : 6. மத்தியஸ்தர் ஏ. சுப்பிரமணியம்,

**வலைப்பந்தாட்டம்**

இப்போட்டியில் மஹரகம பயிற்சிக் கலாசாலை மிகவும் இலகுவாகப் பாலாலியைத் தோற்கடித்தது. புள்ளிகள்: மஹாரகம: 15, பலாலி: 01. இடைவேளையின்போது மஹாரகம 7 புள்ளிகளும், பலாலி ஒரு புள்ளியும் பெற்றிருந்தன. மத்தியஸ்தர்: சாந்தி.

**டேபிள் டென்னிஸ்**

பெண்களுக்கான இப்போட்டியில் பலாலியைச் சேர்ந்த பெண்கள் மிகவும் திறமையாக விளையாடினார்கள். (4-1)

தனித்தனி விளையாட்டு: பலாலி: 3, மஹாரகம: 1,

இருவர் சேர்ந்து விளையாடுவதில் இரண்டிலும் பலாலி வெற்றியீட்டியுள்ளது.

# "பன்றிகள் வாழும் குடிசைகளைவிட மோசமானவை"

## யாழ். மாநகரசபை தொழிலாளர் இல்லங்கள் பற்றி குறைபாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகரசபையின் கீழ் வேலைசெய்யும் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் குடியிருக்கும் வீடுகள், நீர்கொழும்பில் பன்றிவளர்க்கும் குடிசைகளை விட மிக மோசமானவை என்று ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கம், ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்திற்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கூறியுள்ளது. அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சங்க தூக்கோஷ்டியிடம் சங்கக் கிளைகள் உள்ள பகுதிகளில் வாழும் ஸ்தலஸ்தாபன தொழிலாளர் வீட்டுப்பிரச்சினை சம்பந்தமாக ஒருமாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்கும்படி தெரிவித்திருந்தார்கள். அதன்படி கூடியமுயற்சியுடன் சேகரித்த அறிக்கையைத் தருகிறோம்.

இன்று இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் ஸ்தலஸ்தாபன தொழிலாளர்கள்தான் வீட்டுப் பிரச்சினையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஏனைய பகுதிகளில் வீட்டுப்பிரச்சினை தீர்ந்ததாக அர்த்தமல்ல. ஆனால் சிறிதளவாவது இப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களைக் குறிப்பிடுவதானால், 1914-ம் ஆண்டு மகாயுத்தத்தின்போது, குதிரை கட்டிய லாயத்தில்தான் இன்றும் திருகோணமலை நகரசபைத் தொழிலாளர்கள் குடியிருக்கிறார்கள். மட்டக்களப்பில் ஒரு லாயத்தை நான்காக பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நான்கு வீட்டையும் மக்கள் பார்வையிட கொழும்பு நூதனசாலையில்தான் வைக்கவேண்டும்.

---

## சங்கீத ஆராதனை

யாழ்ப்பாணம், சனி

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு சுண்டிக்குளி கிறிஸ்தவ வாலிபர்சங்கத்தில் சங்கீத ஆராதனை சங்கத்தின் தேவாலயத்தில் வாலிபர் சங்கத்தலைவர் திரு. ஜெவராசா பீன் கின் தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாண வை- உம். சி ஏ.காரியதரிசி திரு மாக்ஸ் நவரட்ணராசா நிகழ்ச்சிக்களை நடத்தினார்.

கூட்டத்திற்கு திரு. டி. பி லவகிஸ், திரு. ஜெயசிங்கம் திரு- சாம அல்பிரட் முதலியோர் சமூகமளித்திருந்தனர். சங்கக்காரியதரிசி திரு. எம். ஆர். அருணம்பலம் வரவேற்றுப்பேசினார். கூட்டம் தலைவரின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

---

## மகாவித்தியாலய விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி மகாவித்தியாலயத்தின இல்லங்களுக்கான விளையாட்டு போட்டி எதிர்வரும் புதன்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடபகுதி வித்தியாதரிசி திரு. தணிகாசலம் கலந்து கொள்வார்.

---

## 9 பேர் பலி

பம்பாய். ஜூலை 30

மகாராஷ்டிராவில் ஏற்பட்ட கட்டு விபத்துக் காரணமாக 9 பேர் மூழ்கி மாண்டனர்.

## பக்தையின் குடிசை ஆலயமானது

காங்கேசன்துறை, வெள்ளி

சரவணைப்பகுதியில் வசிக்கும் பொன்னம்மா என்ற முருகபக்தையின் வழிபாட்டு நிலையம் ஆயிரக்கணக்கான அடியார்கள் சமூகத்தில் சரவணை செல்வக்கதிர்காமசுவாமி என நாமகரணம் இடப்பட்டு ஆலயமாக்கப்பட்டுள்ளது.

கதிர்காமக் கொடியேற்ற தினமான நேற்று சேவல் பொறித்த கொடியை கோவில் பூசகரான பொன்னம்மா என்ற முருகபக்தையின் ஆசீர்வாதத்துடன் ஸ்தலத்தில் கூடியிருந்த அடியார்கள் தற்காலிக பந்தலுக்கு முன்பாக அமைந்த கம்பத்தில் ஏற்றி கதிர்காம தின உற்சவத்தை ஆரம்பித்து வைத்தனர். தீவின் பல கிராமங்களிலிருந்தும் வந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் காலை, மாலை இரு பூசைகளிலும் கலந்துகொண்டனர். தொடர்ந்து 15 நாட்களுக்கு விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. காவடி எடுத்தல், பொங்கல் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இருவேரப் பூசைகளும் தமிழில் நடைபெற்றுவருகின்றன.

---

## கூட்டுக்கல்விக்கு முற்றுப்புள்ளி?

### உயர்தர வகுப்புகளில்

கொழும்பு, வெள்ளி

கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ இரியகொல்ல உயர்தர வகுப்புகளில் இயலக்கூடிய அளவிற்கு கூட்டுக் கல்வியை நிறுத்தி விடுவதெனத் தீர்மானித்துள்ளார். இத்திட்டத்தை பாடசாலைகள் சீர்திருத்தப்படும் சமயம் மந்திரி நடைமுறைக்கு கொண்டு வருவார் என்று தெரியவருகிறது.

சமய சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களும் பெற்றோர் ஆசிரிய சங்கங்களும் கூட்டுக் கல்வி, நன்மைகளிலும் பார்க்க அனேக தீமைகளையே செய்துள்ளதென்று கல்வி மந்திரிக்கு சில மாதங்களுக்கு முன்னர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தனர். கூட்டுக் கல்விமுறை தொடர்ந்து 8-ம் வகுப்புவரை நடாத்தப்பட்டு வரும்.

---

## 'பெறுதற்கரிது மானிடப்பிறவி'

கதிர்காமம், வெள்ளி

"பெறுதற்கரிய மானிடப் பிறவியை பெற்ற எந்த மானிடரும் தன் வாழ்நாளில் கணப்பொழுதேனும் அவப்பொழுதாக விரயம் செய்யாது தர்மநெறியிலும் தெய்வசிந்தனையிலும் செலவு செய்தால் அதுவே முத்திக்கு வித்தாகப் பரிணமிக்கின்றது" என்று முத்தமிழ்மணி சி எஸ் எஸ் மணிபாகவதர் கதிர்காமம் இராமகிருஷ்ண மிஷன் மடத்தில் "முருகன் பெருமை" என்ற பொருள் பற்றி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் கதாப்பிரசங்கம் செய்கையில் கூறினார்.

கதிர்காம மகோற்சவத்தை முன்னிட்டு இராமகிருஷ்ண சங்கத்தினர் நாளாந்தம் கூட்டுப் பிரார்த்தனை கதாப்பிரசங்கம், சமயச்சொற்பொழிவுகள் முதலியவற்றை நடாத்தி வருகின்றனர். இந்நிகழ்ச்சிகள் யாவும் மடாதிபதி ஸ்ரீமத் சுவாமி சர்வாநந்தானந்தா தலைமையில் நடைபெறுகிறது.

## உணவுத்திட்ட ஸ்தாபன உதவி

பம்பலப்பிட்டி, வெள்ளி

இலங்கையில் நடைபெறும் சிரமதான இயக்கங்களில் விநியோகிப்பதற்கென 25 லட்சம் ரூபா பெறுமதியுள்ள உபஉணவுப்பொருட்களை உலக உணவு திட்டஸ்தாபனம் பசியிலிருந்து விடுதலை இயக்கம் மூலம் அனுப்பிவைத்துள்ளது.

இலங்கையின் பல பகுதிகளிலும் நடைபெறவிருக்கும் சிரமதான இயக்கங்களில் கலந்து கொள்வோருக்கு விநியோகிக்க அனுப்பப்பட்டுள்ள இந்த உதவி தக்க முறையில் பயன்படுத்தப்படும். இதன் மூலம் சிரமதான இயக்கங்களில் கலந்து கொள்ளும் மக்களுக்கு ஊக்கமளிக்க முடியும், எனக் கருதப்படுகிறது. கோதுமை மாவு, பால் உணவு முதலிய பொருட்கள் இதுவரை இங்கு வந்து சேர்ந்துள்ளன.

---

## 15,000 ஏக்கரில் கரும்புச் செய்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

சமனலவப் பகுதியில் 15 000 ஏக்கர் நிலம் கரும்புச் செய்கைக்கு உகந்ததாக உள்ளதாக ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இப்பொழுது கந்தளாய், கல்லோயாப் பகுதியிலேயே கரும்புச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

## காரைநகர் கதிர்காம சுவாமி மகோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் அரசடிக் காட்டு ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் கதிர்காமசுவாமி திருவிழா மகோற்சவம் சென்ற புதன்கிழமை ஆரம்பமாகியது திருவிழா 16 நாட்கள் நடைபெறும் 4-8-65 புதன் வேட்டைத்திருவிழாவும் 11-8-65 புதன் ரதோற்சவமும் திருமணபட்டமும் சுப்பூரண பூர்த்தி விழாவும் 12-8-65 வியாழன் வியாவிற் சமுத்திர தீர்த்தமும் ஐயனார்கோவிலில் விசேடஆராதனையும் தீர்த்தமாடி வந்தவுடன் தீக்குளிப்பும் இரவுதுவஜா அவரோகணமும் நடைபெறும். 8-8-65 வெள்ளி மாசங்காபிஷேகமும் இரவு கண்டிகைத் திருவிழாவும் நடைபெறும்.

---

## வயோதிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

இணுவிலைச் சேர்ந்த 65 வயதுடைய எஸ் கந்தையா என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் சகோதரர் எஸ். சுப்பிரமணியம், டாக்டர், வி.ஏச்.என். சந்திரசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

---

## பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை, வெள்ளி

உடுப்பிட்டிவட்டாரத் தமிழ்க் கலவன் பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் ஆகஸ்ட் மாதம் 3ம், 5ம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் 21 பாடசாலைகள் கலந்து கொள்ள இருப்பதாயும் வடமராட்சிக் காரியாதிகாரி திரு ஏ சி விசுவநாதன் தலைமையில் போட்டிகள் நடைபெறுமெனவும் தெரியவருகிறது.

# ஜோன்ஸனின் வியட்னாம் கொள்கைக்கு அமெரிக்கர் பேராதரவு

வாஷிங்டன், ஜூலை 30

வியட்னாமில் ஜனாதிபதி ஜோன்ஸன் மேற்கொண்டிருக்கும் உறுதியான நிலைக்கு அமெரிக்க மக்களும், பத்திரிகைகளும், காங்கிரசும் பேராதரவு தந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாட்டில் படைக்கு ஆள் திரட்டும் எண்ணிக்கை மாதம் 17,000லிருந்து 35 000ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

அதேசமயம் தென் வியட்னாமிலிருந்து அந்நியத் துருப்புக்கள் வெளியேறவேண்டுமென்றும், தென்பகுதி வட வியட்னாமுடன் ஒரே ஐக்கிய நாடாக உருவெடுக்க வேண்டுமென்றும் அதிபர் ஹோ சிமின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

வியட்னாம் பிரச்சினை மிகவும் கஷ்டமானது என்றும், அதைத் தீர்க்க சகல முற்போக்குச் சக்திகளும் இணையவேண்டும் என்றும் ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் கூறினார்,

## ஆமர் தாயகம் திரும்பினார்

அக்ரா, ஜூலை 30

கானாவிலுள்ள கென்யா நாட்டு பிரதிநிதி திரு. ஆமர் இன்று தாயகம் திரும்பினார். வடக்கு வியட்னாம் அதிபர் ஹோ சிமின் பிரதமர் திரு பாம்வான்டாங் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தைகள் பயனளிக்கக் கூடியதாயிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

---

## சன சமூக நிலையம் சீல் வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம் சனி

காங்கேசன்துறை சனசமூக நிலையத்தைச் அரசு முன்னேவையால் அடைத்து, சனசமூகநிலையத்தைப் பூட்டி சீல் வைத்து அதன் திறப்புகளை காங்கேசன்துறை பொலிஸாரிடம் காங்கேசன்துறை கிராமசபைத்தலைவர் ஒப்படைத்துள்ளதாக அறியப்படுகிறது.

---

கொழும்பு வெள்ளி

ஏற்றுமதியை அபிவிருத்தி செய்வதற்காக விரைவில் ஒரு ஏற்றுமதி அபிவிருத்திசபையை அல்லது கார்ப்பரேஷனை உருவாக்க அரசாங்கம் யோசனை செய்து வருகிறது.

## சந்தேகத்தின் மீது கைது

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரத்திலுள்ள உச்சி ஓடையென்னும் இடத்தில்பனை வடலிக்குள், கிடந்த பச்சிளங் குழந்தை சப்பந்தாக சங்குவேலியைச் சேர்ந்த கன்னிப் பிள்ளை (40 வயது) என்ற பெண்ணைக் சந்தேகத்தின் மீது ஆனைக்கோட்டை பொலிஸார் கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

---

## காரில்வந்த...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டக்டர் ஒருவர் தெரிவித்தாராம்.

திடீர் பரிசோதனைக் குழுவைச் சேர்ந்த ஏனையமூவரின் வாக்கு மூலங்கள் பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டது.

திரு இராமசாமியின் உறவினர்களும் நண்பர்களும் அவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

கொழும்பிலிருந்து திரும்பிய பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் டிப்போ மனேஜருடனும் பிராந்திய மனேஜருடனும் இதுவிஷயமாக தொடர்பு கொண்டுள்ளார்.

இதற்கிடையே வேலை நிறுத்தம் ஒன்றில் பருத்தித்துறை டிப்போ தொழிலாளர்கள் ஈடுபடக்கூடுமெனவும் பலமான வதந்திகள் அடிபடுகின்றன.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் தேவி மகோற்சவம் தீர்த்தோற்சவ தினமான இன்று காலை 7-30-க்கு பூஜையும் 9-00-க்கு தீர்த்தோற்சவமும், 12-30-க்கு யாகரும்ப அபிஷேகமும், மாலை 6-30-க்கு துவஜ அவரோகணமும் நடைபெறும்.

---

## வருடாந்த விழாவும் வரவேற்பு விழாவும்

யாழ்ப்பாணம், சனி

காரதீவு சனசமூகநிலைய வருடாந்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவுடன் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மு. திருச்செல்வத்துக்கும் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது. விழாவுக்கு திரு கு. வி. தம்பித்துரை, தலைமைவகிப்பார்.

---

## தேர்த்திருவிழா ஒலிப்பதிவு

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தில் நேற்று நடைபெற்ற தேர்த்திருவிழா அஞ்சல் ஒலிப்பதிவு இன்று மாலை 6-45 முதல் 7-00 மணிவரை இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படும்.

---

## வருடாந்த பொதுக் கூட்டம்

பருத்தித்துறை,வெள்ளி

அகில இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பருத்தித்துறையில் நடைபெற்றபோது பின்வருவோர் நட்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இயக்கர் தலைவர் திரு கே கந்தசாமி, தலைவர் திரு வி சரவணமுத்து. காரியதரிசி திரு கே சிவகுரு, உபகாரியதரிசி திரு ஏ கெங்கேஸ்வரன், பொருளாளர் திரு கே ஏ கண்ணுத்துரை, உபபொருளாளர் திரு கே பொன்னம்பலம். மேலும் ஐந்துபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்

## காணவில்லை

W 160051, N 180589, M 928988 இலக்கம் கொண்ட கூப்பன்களும், சந்திரராஜா என்ற பெயருடைய கூப்பனும் 29-7 65 பிற்பகல் 4-00 மணியளவில் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வ. த இராசையா, சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் தெற்கு, கல்லூர் யாழ்ப்பாணம் என்பாரிடத்தில் சேர்ப்பித்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 716

---

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த வள்ளி சண்முகம் என்றவரின் மோட்டார் கார் லைசென்சும், C N 8802 காருக்குரிய வல்லி ஏகாம்பரம் என்ற பெயரில் உள்ள மோட்டார் கார் இன்சூரன்சும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்; 717

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 68-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.